ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2292/34 - 2022 අගෝස්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2022.08.09

*2292/34 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 4/2017*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்**

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6, 10, 11, 13, 14, 16 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 117ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நிமல் சிறிபால த சில்வா,**
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும்
விமான சேவைகள் அமைச்சர்

கொழும்பு,
*2022, ஓகத்து 03.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2022ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கை நீர் வானூர்தி நிலையங்கள் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. நீர் வானூர்தி நிலைய உரிமமொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு -

1A - PG 5920 — 506 (2022/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) சட்டத்தின் 6ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட வான்வழிச் சேவைகளை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட சேவை வழங்குநரொருவர்;

(ஆ) மிதவை விமானங்களின் தொழிற்பாட்டுக்கான வான் தொழிற்படுத்துநர் சான்றிதழொன்றை வைத்திருக்கும் வானூர்திச் சொந்தக்காரரொருவர் அல்லது தொழிற்படுத்துநரொருவர்;

(இ) ஒன்றில் இலங்கை சுற்றுலாப்பயண அபிவிருத்தி அதிகாரசபையில் அல்லது இலங்கை குடியியல் வான்செலவு அதிகாரசபையில் பதிவுபெற்றுள்ள சுற்றுலாப் பயண, ஹோட்டல் அல்லது பயணத் தொழிற்படுத்துநரொருவர்; அல்லது

(ஈ) நீர்நிலையொன்றின் சொந்தக்காரர் அல்லது சட்டமுறையான தொழிற்படுத்துநரொருவர்,

தகவுடையவராதல் வேண்டும்.

3. (இதனகத்துப் பின்னர் ‘வானூர்தி நிலையம்’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) நீர் வானூர்தி நிலையமொன்றைத் தாபிப்பதற்கு, தொழிற்படுத்துவதற்கு அல்லது பேணுவதற்கு விரும்பும் விண்ணப்பதாரரொருவர், பின்வருவனவற்றுடன் சேர்த்து, இதற்கான அட்டவணை I இல் தரப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வானூர்தி நிலைய உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்–

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஓர் உரிமக் கட்டணம்;

(ஆ) வானூர்தி நிலையத் தொழிற்பாட்டுக் கைநூலின் பிரதியொன்று;

(இ) 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 23ஆஆ என்னும் பிரிவின் கீழான, வானூர்தி நிலையம் பற்றிய தொடக்கச் சூழல்சார் பரிசோதனை அறிக்கையொன்று அல்லது சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையொன்று;

(ஈ) இயைபான உள்ளூர் அதிகாரசபைகளிடமிருந்தும், நீர் நிலைகளுக்குப் பொறுப்பாகவுள்ள நிறுவனங்கள் அல்லது திணைக்களங்களிடமிருந்தும் மற்றும் நீர்நிலைகளின் சட்டமுறையான சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநரிடமிருந்தும் பெறப்பட்ட வானூர்தி நிலையத்தைத் தாபிப்பதற்கான அங்கீகாரம்;

(உ) வானூர்தி நிலையத்தின் உத்தேச நிர்மாணிப்புப் பற்றிய விபரமான வடிவமைப்பு;

(ஊ) எந்த வானூர்தி நிலையத்துக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதோ அந்த வானூர்தி நிலையத்துக்கான வானூர்தியின் பண்புகளுக்கிணங்க வானூர்தி நிலையத் தரவுகள்;

(எ) வானூர்தி நிலையத்தின் மத்தியிலிருந்து பத்து கடல் மைல்களைக்கொண்ட இடப்பரப்பொன்றைச் சூழ்ந்திருக்கின்ற, உத்தேச வானூர்தி நிலையத் தளத்தின் இடக்கிடப்பு வரைபடம் அத்துடன்

(ஏ) அணுமுறை மேற்பரப்பில் இருக்கும் எவையேனும் முக்கிய இடையூறுகள்

பற்றிய விபரங்கள்.

4. பணிப்பாளர் தலைமையதிபதி ‘‘வானூர்தி நிலைய’’ உரிமமொன்றை வழங்குவதற்கு முன்னர், பின்வருவனவற்றைக் கவனத்துட்கொண்டு, வானூர்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட இடத்தின் பொருத்தப்பாடான தன்மையை மதிப்பீடு செய்தல் வேண்டும் -

(அ) இராணுவ வானூர்தி நிலையங்களுட்பட வேறு வானூர்தி நிலையங்களுக்கு அவ்விடத்தினது அண்மித்த தன்மை;

(ஆ) இடையூறுகளும் ஏலவேயுள்ள வான்பரப்பு மட்டுப்பாடுகளும்;

(இ) வானூர்தி நிலையத்தின் நிர்மாணிப்பு பொதுமக்கள் அக்கறைக்கு எதிராக இல்லாதிருத்தல்;

(ஈ) அண்டியுள்ள காணிகளின் நிலைமை;

(உ) 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் செம்மை; அத்துடன்

(ஊ) வானூர்தி நிலைய வசதிகள், சேவைகள் மற்றும் உபகரணங்கள் பற்றி முன்னெடுக்கப்பட்ட களப் பரிசோதனைகளினதும் சோதனைகளினதும் கண்டறிதல்கள்.

5. பணிப்பாளர் தலைமையதிபதி -

(அ) இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டவாறான 'ஆ' என்னும் படிவத்தில், 3ஆம் மற்றும் 4ஆம் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விண்ணப்பதாரரொருவருக்கு வானூர்தி நிலைய உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) விண்ணப்பதாரரொருவருக்கு உரிமமொன்றை அளிப்பதற்கு மறுக்கலாம் என்பதுடன், அத்தகைய முடிவு எடுக்கப்பட்ட பின்னர் பதினான்கு நாட்களுக்குப்

பிந்தாமல், மறுப்புக்கான காரணங்கள் பற்றி விண்ணப்பதாரருக்கு எழுத்தில் அறிவிக்கலாம்.

6. வானூர்தி நிலைய உரிமமொன்று -

(அ) சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் இடைநிறுத்தப்பட்டால் அல்லது இல்லாதாக்கப்பட்டால் ஒழிய, அல்லது அதுவரையில், செல்லுபடியாகுதல் வேண்டும் என்பதுடன் புதுப்பிக்கப்படத்தக்கதாக இருத்தலும் வேண்டும்;

(ஆ) கைமாற்றப்படத்தகாததாக இருத்தல் வேண்டும்.

7. (1) (இதனகத்துப் பின்னர் 'தொழிற்படுத்துநர்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வானூர்தி நிலையமொன்றின் தொழிற்படுத்துநரொருவராக இருப்பதற்கு உட்கருதுகின்ற விண்ணப்பதாரரொருவர், பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துக்காக, வானூர்தி நிலையத் தொழிற்பாட்டுக் கையேட்டின் இரண்டு பிரதிகளுடன் சேர்த்து வானூர்தி நிலைய உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றை அவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) வானூர்தி நிலையத் தொழிற்பாட்டுக் கையேடொன்று பின்வருமாறு இருத்தல் வேண்டும் -

(அ) தொழிற்படுத்துநரால் கையொப்பமிடப்பட்டிருத்தல்;

(ஆ) அச்சிடப்பட்ட படிவமொன்றில் அல்லது பிரதிகளின் விடயத்தில் அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் படிவமொன்றில் இருத்தல்;

(இ) மீளாய்வு செய்வதற்கு இலகுவான வடிவமொன்றில் இருத்தல்;

(ஈ) நீர் வானூர்தி நிலையத்தின் தொழிற்பாட்டிலும் பராமரிப்பிலும் ஈடுபடுத்தப்படுகின்ற ஊழியர்கள், வசதிகள், உபகரணங்கள், சேவைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் அத்துடன் தொடர்புடைய சேவைகள் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறான வேறு எவையேனும் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கியிருத்தல்;

(உ) மீளாய்வை ஏட்டிற் பதிவதற்கான பக்கம் உள்ளடங்கலாக, தற்போதைய பக்கங்களையும் வேறு திருத்தங்களையும் பதிவு செய்வதற்கும்

இற்றைப்படுத்துவதற்குமான முறைமையொன்றைக் கொண்டிருத்தல்;

(ஊ) தயாரிப்பு, மீளாய்வு மற்றும் அங்கீகாரச் செயல்முறை என்பவற்றை வசதிப்படுத்தும் முறையொன்றில் ஒழுங்கமைக் கப்பட்டிருத்தல்.

தொழிற்படுத்துநரொருவர் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் -

(அ) அங்கீகரிக்கப்பட்ட வானூர்தி நிலையத் தொழிற்பாட்டுக் கையேட்டின் பிரதியொன்றை பணிப்பாளர் தலைமையதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு ஒப்படைப்பதுடன், வானூர்தி நிலையம் தொழிற்பாட்டிலுள்ளபோதெல்லாம் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினால் பார்வையிடப்படுவதற்காக அதன் அங்கீகரிக்கப்பட்ட மற்றைய பிரதியைத் தொழிற்படுத்துநரின் பிரதான தொழிலிடத்தில் வைத்திருத்தல்;

(ஆ) வானூர்தி நிலைய தொழிற்பாட்டுக் கையேட்டிலுள்ள தகவல்களின் செம்மையைப் பேணுவதற்கு அவ்வானூர்தி நிலைய தொழிற்பாட்டுக் கையேட்டைத் திருத்துவதற்கான அவசியமுள்ளபோதெல்லாம், அதனை அவ்வாறு திருத்துதல். வானூர்தி நிலைய தொழிற்பாட்டுக் கையேட்டுக்கான ஏதேனும் திருத்தம் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க நடவடிக்கைமுறைக்கிணங்க, அவரது எழுத்திலான பணிப்புக்களுக்கிணங்கிச் செய்யப்படுதல் வேண்டும்;

(இ) வானூர்தி நிலைய தொழிற்பாட்டுக் கையேட்டில் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளுக்கிணங்க வானூர்தி நிலையத்தைத் தொழிற்படுத்துதல் மற்றும் பேணுதல்;

(ஈ) வானூர்தி நிலையத்தின் பௌதிக நிலைமையிலுள்ள ஏதேனும் தற்காலிக அல்லது நிரந்தர மாற்றத்தையும், வானூர்திகளின் பாதுகாப்பான தொழிற்பாட்டினைப் பாதிக்கக்கூடியதான வானூர்தி நிலையத்தின் தொழிற்பாட்டுடன் அல்லது பேணுகையுடன் தொடர்புடைய வேறேதேனும் நிகழ்வினையும் பற்றி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல்;

(உ) அத்தகைய மாற்றங்கள் வான்கலமோட்டலின் பாதுகாப்புப் பற்றிய அக்கறைகளுக்கு அவசியமாகவுள்ளன என அவர் கருதுகின்றவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்புக்களின்மீது வானூர்தி நிலைய தொழிற்பாட்டுக் கையேட்டில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறையை மாற்றுதல்.

8. (1) வானூர்தி நிலைய உரிமமொன்றை வழங்கியதனை உடனடுத்து, தொழிற்படுத்துநரொருவர், வானூர்தி நிலையமொன்றில் வானூர்தி நிலைய அவசர நிலைமைத் திட்டமொன்றைத் தாபித்தல் வேண்டும்; அது பின்வருமாறு இருத்தல் வேண்டும் -

(அ) வானூர்தி நிலையமொன்றில் நடாத்தப்படும் வானூர்தித் தொழிற்பாடுகளையும் செயற்பாடுகளையும் ஒத்ததாகவிருத்தல்;

(ஆ) வானூர்தி நிலையமொன்றில் அல்லது அதன் அருகாமையில் அவசரநிலைமையொன்று நிகழும் பட்சத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு ஏற்பாடு செய்தல்;

(இ) தோதான விசேடித்த மீட்புச் சேவைகளினதும் அவற்றுடனான ஒருங்கிணைப்பினதும் உடனடியாகக் கிடைக்கத்தகுதன்மையை உள்ளடக்கியிருத்தல்.

(2) உப ஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அவசரநிலைமையொன்று பின்வருபவற்றை உள்ளடக்குகின்றது -

(அ) வானூர்தி அவசரநிலைமையொன்று;

(ஆ) இயற்கைப் பேரழிவுகளும் வெடிகுண்டு அச்சுறுத்தல்கள் உள்ளடங்கலான நாசகார வேலைகளும்;

(இ) வானூர்தியின் சட்டமுறையற்ற கைப்பற்றுகை;

(ஈ) முறைகேடான கையாளுகையின் விளைவு;

(உ) அபாயகரமான பொருட்களை இடம்பெயர்த்தலும் களஞ்சியப்படுத்தலும்;

(ஊ) கட்டிடத்தில் தீயேற்படும் நிகழ்வு.

(3) அவசரநிலைத் திட்டமொன்று, மீட்பு ஒருங்கிணைப்பு நிலையங்களுடனான ஒருங்கிணைப்புக்காகவும், வானூர்தி நிலையமொன்றின் வெளிப்பகுதியில் ஏற்படக்கூடிய அவசரநிலை உள்ளடங்கலான அவசரநிலையொன்று ஏற்படும் பட்சத்தில், பின்வரும் எந்த முகவராண்மையின் உதவி தேவைப்படக்கூடுமோ அந்த முகவராண்மையின் பங்குபற்றுகைக்காவும் ஏற்பாடு செய்தல் வேண்டும் -

(அ) தீயணைப்புப் பிரிவு;

(ஆ) பொலிசு;

(இ) ஆயுதம் தாங்கிய படையினர்;

(ஈ) மருத்துவ மற்றும் பிணியாளர் வண்டிச் சேவைகள்; அத்துடன்

(உ) வைத்தியசாலைகள்.

9. தொழிற்படுத்துநரொருவர், வானூர்தி நிலைய தொழிற்பாட்டுக் கையேட்டுக்கிணங்க காப்பு முகாமைத்துவ முறைமையொன்றைத் தாபித்தல் வேண்டும்.

10. தொழிற்படுத்துநரொருவர் வானூர்தி நிலையத்துக்கான பயனுள்ள கூர்ந்தவதான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தாபித்துப் பேணுதல் வேண்டும்; அது, பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் -

(அ) தகுதிவாய்ந்த வானூர்தி நிலைய ஆளணியினர் கூர்ந்தவதான நிகழ்ச்சித்திட்டத்தை பயனுள்ளவாறாக நிறைவேற்றுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைமுறைகள்;

(ஆ) ஏதேனும் சோதனையின்போது அவதானிக்கப்பட்ட பாதுகாப்பற்ற வானூர்தி நிலைய நிலைமைகளின் உடனடித் திருத்தங்களை உறுதிப்படுத்துவதற்கான அறிக்கையிடல் முறைமை.

11. (1) தொழிற்படுத்துநரொருவர், வானூர்தி நிலையத்தின் மீதான ஏதேனும் சாத்தியமுள்ள தீப்பற்றலுக்கு எதிரான தடுப்பு வழிமுறைகளுடன் தீத்தடுப்பு மற்றும் மீட்பு நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தாபித்தலும் தொழிற்படுத்தலும் மற்றும் பேணுதலும் வேண்டுமென்பதுடன் அத்தீத்தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆளொருவரை அடையாளங்காணலும் வேண்டும்.

(2) வானூர்தி நிலையமொன்று குறிக்கப்பட்ட தீயணைப்புச் சேவைகளைக் கொண்டிராதுள்ளவிடத்து, தொழிற்படுத்துநர், வானூர்தி நிலையத்துக்கான தீத்தடுப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றைப் பேணுவதற்கும் நிவர்த்திசெய்யப்படுவதற்கான எவையேனும் அபாயகரமான நிலைமைகள் பற்றித் தொழிற்படுத்துநருக்கு மதியுரை வழங்குவதற்குமென உள்ளூர் தீயணைப்பு அதிகாரியை அல்லது வேறு ஏதேனும் தீத்தடுப்பு அதிகாரியை ஒழுங்கேற்பாடு செய்தல் வேண்டும்.

12. உரிமம்பெற்ற வானூர்தி நிலையம் ஒவ்வொன்றும் -

(அ) வானூர்தி நிலையம் உரிமமளிக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டும்;

(ஆ) வானூர்தி நிலைய நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்கும்;

(இ) நீர்நிலையைச் சுற்றியுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கப்படவேண்டிய,

அடையாளங்காணல் சமிக்ஞைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13. பணிப்பாளர் தலைமையதிபதி, வானூர்தி நிலையமொன்றின் காப்பு பேணப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, வானூர்தி நிலைய உரிமமொன்று வழங்கப்படுவதற்கு முன்னரும், அடுத்துப்பின்னரான வேறு எந்த நேரத்திலும் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் -

(அ) வானூர்தி நிலைய வசதிகள், சேவைகள் மற்றும் சாதனங்களைச் சோதித்தலும் அவைமீதான பரீட்சிப்புக்களை நிறைவேற்றுதலும்;

(ஆ) வானூர்தி நிலையத்தின் காப்பு முகாமைத்துவ முறைமையைச் சரிபார்த்தல்;

(இ) அட்டவணை II இல் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பௌதிகப் பண்புகள் மற்றும் தொழிற்பாட்டு நிலைமைகள் தொடர்பிலான இயைபான தகவல்களுடன், உரிமமளிக்கப்பட்ட வானூர்தி நிலையங்கள் பற்றிய இடாப்பை இற்றைப்படுத்தல்.

14. பணிப்பாளர் தலமையதிபதி -

(அ) தொழிற்படுத்துநர், இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க காப்புச் சோதனை அல்லது ஆய்வு ஒன்றை நிறைவேற்றுவதிலிருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளைத் தடுக்கின்றவிடத்து;

(ஆ) காப்புப் பரிசோதனை அல்லது ஆய்வு ஒன்றின்மேல், வானூர்தி நிலையமொன்றின் தொழிற்படுத்துநர் இவ்வொழுங்கு விதிகளுக்கு இணங்கியொழுகியிருக்கவில்லை என்றும், பரிசோதனையின் பின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அதுசார்பில் தேவைப்படுத்தப்பட்ட ஒரு காலப்பகுதியினுள் அவர் ஏதேனும் இணங்கியொழுகாமைக்கான பரிகாரத்தை வழங்கத் தவறியுள்ளார் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளவிடத்து;

(இ) வான்செலவுக் காப்பு நலன்கருதி பணிப்பாளர் தலைமையதிபதியினால் அது அவசியமானதாகக் கருதப்படுகின்றவிடத்து; அல்லது

(ஈ) நீர்நிலையைச் சுற்றியுள்ள காணிப்பயன்பாட்டின் மாற்றம் காரணமாக, உரிமத்தின் ஆரம்ப நிபந்தனைகள் பேணப்படாதவிடத்து அல்லது பேணப்பட முடியாதுள்ளவிடத்து,

வானூர்தி நிலைய உரிமமொன்றை இடைநிறுத்துதல் வேண்டும்.

15. வானூர்தி நிலைய உரிமமொன்றின் இடைநிறுத்துகையினால் இன்னலுற்ற தொழிற்படுத்துநரொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்திலான மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

16. (1) பணிப்பாளர் தலைமையதிபதி -

(அ) தொழிற்படுத்துநர் வானூர்தி நிலையத்தில் தொழிற்பாடுகளைக் கைவிட்டுள்ளவிடத்து;

(ஆ) தொழிற்படுத்துநர் எந்த நிபந்தனைக்கமைய வானூர்தி நிலைய உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் நிபந்தனையை மீறுகின்றவிடத்து,

வானூர்தி நிலைய உரிமமொன்றை இல்லாதொழித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி இவ்வொழுங்குவிதியின்கீழ் வானூர்தி நிலைய உரிமமொன்றை இல்லாதொழித்துள்ளவிடத்து, அவர் அப்பொருள்பட்ட அறிவித்தலொன்று அதே திகதியில் ஆகக்குறைந்தது ஓர் உள்நாட்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்தித்தாள்களில் வெளியிடப்படுவதைச் செய்வித்தல் வேண்டும்.

17. (1) வானூர்தி நிலையமொன்றின் தொழிற்படுத்துநர், உரிமத்தை ஒப்படைக்க விரும்பின், அவர், அவருடைய உட்கருத்துப் பற்றிய தொண்ணூறு நாட்களுக்குக் குறையாத எழுத்திலான அறிவிப்பை பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, தொழிற்படுத்துநரினால் குறித்துரைக்கப்பட்ட நாளில், வானூர்தி நிலைய உரிமத்தை இல்லாதொழிப்பதற்கான படிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

18. ஒழுங்குவிதி 16 இன் கீழ் எந்தத் தொழிற்படுத்துநரின் வானூர்தி நிலையை உரிமம் இல்லாதொழிக்கப்பட்டதோ அந்தத் தொழிற்படுத்துநர் அத்தகைய இல்லாதொழிப்புச் செய்யப்பட்ட நாளில் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் -

(அ) வானூர்தி நிலைய உரிமத்தைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் திருப்பிக்கொடுத்தல்;

(ஆ) வானூர்தி நிலையத் தளத்திலிருந்து வானூர்தி நிலைய அடையாளங்காணல் சமிக்ஞைகள் எல்லாவற்றையும் நீக்குதல்.

19. பின்வரும் செயற்பாடுகள் வானூர்திநிலையமொன்றினுள் தடைசெய்யப்பட்டுள்ளன -

(அ) ஒன்றில் வானூர்தி நிலைய உரிமத்தில் அல்லது வானூர்தி நிலைய தொழிற்பாட்டுக் கையேட்டில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனையை மீறும் வகையில் வானூர்தி நிலையத்தைத் தொழிற்படுத்துதல்;

(ஆ) வானூர்தி நிலையத்தின் முறையான பயன்பாட்டில் முட்டுக்கட்டையிடுதல் அல்லது தலையிடுதல்;

(இ) வானூர்தி நிலையம் தொடர்பாக எவரேனும் ஆள் அவருக்குள்ள கடமையை நிறைவேற்றிச் செயலாற்றுகையில் அவருக்கு முட்டுக்கட்டையிடுதல்;

(ஈ) ஏதேனும் வானூர்திக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அதிகாரமளிக்காமல் அவ்வானூர்தியில் ஏறுதல் அல்லது ஏறுவதற்கு எத்தனித்தல்;

(உ) ஏதேனும் வானூர்திக்கு அல்லது வானூர்தி சம்பந்தமாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொருளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அதிகாரமளிக்காமல் அவ்வானூர்தியில் அல்லது அப்பொருளில் இடையீடுசெய்தல் அல்லது தலையிடுதல்;

(ஊ) (i) ஏதேனும் இடத்தில் அல்லது அதற்கு அண்மையில் வெளிக்காட்டப்பட்ட அறிவித்தல் மூலம் அத்தகைய செயல் தடைசெய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஏதேனும் இடத்தின்மேல் அல்லது இடத்தில்;

(ii) வானூர்தியொன்றிலிருந்து அல்லது திரவ எரிபொருள் அல்லது வெடிபொருள் களஞ்சியமொன்றிலிருந்து பதினைந்து மீற்றர்களுட்குட்பட்ட ஏதேனும் இடத்தின்மேல் அல்லது இடத்தில்,

புகைத்தல் அல்லது ஏதேனும் திறவையொளியைக் கொண்டுவருதல் அல்லது ஒளிர்வித்தல்;

(எ) தீப்பிடித்தலை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்தும் சாத்தியமுள்ள ஏதேனும் செயல்;

(ஏ) வானூர்தியொன்றை ஏதேனும் இடத்தில் அல்லது நிலையில் இடும் நோக்கத்துக்காகப் பொறுப்பாகவுள்ள ஆளினால் நியமிக்கப்பட்ட அந்த ஏதேனும் இடத்தில் அல்லது நிலையில் அவ்வானூர்தியை இடுவதற்குத் தவறுதல்;

(ஐ) நிலையான வானூர்தியொன்றை பிணைப்பிடுவதற்கு அல்லது வேறுவகையில் முறையாக நிலைநிறுத்துவதற்குத் தவறுதல்;

(ஒ) பொறுப்பாகவுள்ள ஆளின் அனுமதியின்றி, வானூர்தி நிலையத்தின் பாகமாக அமைகின்ற அல்லது அதற்காக ஏற்பாடு செய்கின்ற அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட (ஏதேனும் அறிவித்தல் உள்ளடங்கலாக) ஏதேனும் கட்டமைப்பை அல்லது வேறு ஆதனத்தை, அது அசைவுள்ள ஆதனமாயினுஞ்சரி அசைவற்ற ஆதனமாயினுஞ்சரி, இடமாற்றுதல், சேதப்படுத்தல், உருக்குலைத்தல் அல்லது மாற்றியமைத்தல்;

(ஓ) எந்தச் சூழ்நிலைகளில் ஏதேனும் வானூர்தியின் அல்லது அதன் பயணிகளின், சரக்குகளின் அல்லது இயக்குதொகுதியினரின் காப்பு அல்லது பாதுகாப்பு ஆபத்துக்குட்படக்கூடியதாகவுள்ளதோ அல்லது வானூர்தி நிலையத்தின் முறையான பணியாற்றுகை தடைசெய்யப்படக்கூடியதாகவுள்ளதோ அந்தச் சூழ்நிலைகளில் இவ்வொழுங்குவிதிகள் எவ்வானூர்தி நிலையத்துக்கு ஏற்புடையனவாகின்றனவோ அவ்வானூர்தி நிலையத்தினுள் பிரவேசித்தல் அல்லது அதில் தரித்திருத்தல்.

(ஔ) பட்டங்களை பறக்கவிடுதல் அல்லது தொழிற்படுநிலையிலுள்ள வானூர்திப் பணியாளர்களுக்கு தடங்கல்களை விளைவிக்கின்ற ஊடொளிக் கற்றையை அல்லது வேறு சாதனத்தைப் பயன்படுத்துதல்.

20. (1) தொழிற்படுத்துநர் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்-

(அ) வானூர்தி நிலையத்தின் அண்மித்த பகுதியில் அல்லது பகுதியினுள் காணப்படும் இடையூறுகள் கண்டுபிடிக்கப்பட்டு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல்;

(ஆ) தொழிற்பாட்டு நேரங்களின்போது நகரும் இடப்பரப்பு பேரிடர்களற்றதாக உள்ளதென்பதை உறுதிப்படுத்துதல்;

(இ) இவ்வொழுங்குவிதிகளுக்கு முரணாக வானூர்தி நிலையத்தினுள் நங்கூரமிடப்பட்ட, பிணைப்பிடப்பட்ட அல்லது வேறு வகையிலுள்ள ஏதேனும் பொருளை அல்லது கலத்தை நீக்குவதற்கு நியாயமான எல்லாப் படிமுறைகளையும் எடுத்தல்;

(ஈ) தொழிற்பாட்டு நேரங்களின்போது எல்லா வானூர்திகளினதும், அவற்றின் பயணிகள், சரக்குகள் மற்றும் இயக்கு தொகுதியினரினதும் காப்பை மேம்படுத்துவதற்காக, எந்த வானூர்தி நிலையத்துக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்றனவோ அந்த வானூர்தி நிலையத்தில் அதிகாரமளிக்கப்படாத ஆளெவரும் பிரவேசிக்கவில்லை அல்லது தரித்திருக்கவில்லை என்பதை உறுதிசெய்வதற்குப் பொறுப்பாகவிருத்தல்;

(உ) வானூர்திக்கும் நிலத்திற்குமிடையேயான தொடர்பாடலுக்குத் தலையீட்டை ஏற்படுத்தக்கூடியவாறாக ஆளெவரும் இவ்வொழுங்குவிதிகள் எந்த வானூர்தி நிலையத்துக்கு ஏற்புடையனவாகின்றனவோ அந்த ஏதேனும் வானூர்தி நிலையத்தின் மீதுள்ள ஏதேனும் உபாயத்தைத் தொழிற்படுத்துவதில்லை என்பதை உறுதிப்படுத்துதல்;

(ஊ) வானூர்தியின் காப்பான தொழிற்பாட்டைப் பாதிக்கக்கூடிய ஏதேனும் வானூர்தி நிலையம் பற்றி (வான்படைப் பணியாளர்களுக்கு அறிவித்தலொன்றை வழங்குவதற்காக) செயல்முறைக்குகந்த வரை விரைவாக வான்வழித் தகவற் சேவைக்கு (ஏஐஎஸ்) அறிவித்தல்;

(எ) அத்தகைய காப்பற்ற நிலைமை உள்ளவிடத்து அத்தகைய வானூர்தி நிலையத்தின் பாகங்களின் மீது தொழிற்பாடுகள் நடாத்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துதல்.

(2) (அ) தொழிற்படுத்துநரொருவர், வானூர்தி நிலையமொன்றுக்காக ஆகக்குறைந்தது ஒரு காற்றுத் திசையறி சுட்டியையேனும் ஏற்பாடு செய்து பேணுதல் வேண்டும்.

(ஆ) காற்றுத் திசையறி சுட்டியொன்று, பறந்துகொண்டிருக்கும் அல்லது நகரும் இடப்பரப்பின் மீதிருக்கும் வானூர்தியொன்றுக்குப் புலப்படக்கூடியவாறாகவும், அருகிலுள்ள பொருட்களினால் விளைவிக்கப்படும் வான்சார் இடையூறுகளின் தாக்கங்களிலிருந்து விடுபடக்கூடிய அத்தகைய வழியிலும் அமைக்கப்படுதல் வேண்டும்.

(இ) காற்றுத் திசையறி சுட்டியொன்றின் பண்புகள் மற்றும் அதனை நிறுவுவதற்கும் பேணுவதற்குமான வழிமுறைகளும் நடவடிக்கைமுறைகளும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளுக்கும் இணங்கியவையாக இருத்தல் வேண்டும்.

21. (1) தொழிற்பாட்டு நேரங்களின்போது வானூர்தி நிலையமொன்று, ஏற்புடையற்பாலனவான கட்டணங்களின் செலுத்துகைக்கமைய, மிதவை விமானங்களின் தொழிற்பாட்டுக்கான அங்கீகாரத்தை வைத்திருக்கும் ஏதேனும் வானூர்தியினால் பயன்படுத்தப்படுவதற்குக் கிடைக்கப்படற்பாலதாக இருத்தல் வேண்டும்.

(2) வானூர்தி நிலையமொன்று, காலை முதல் மாலை வரை வானூர்த்தித் தொழிற்பாடுகளுக்காகத் திறந்திருத்தல் வேண்டும்.

(3) வானூர்தி நிலையமொன்று எந்த நீர்நிலையில் தாபிக்கப்பட்டு தொழிற்படுத்தப்படுகின்றதோ அந்த நீர்நிலையின் சொந்தக்காரர் நீர்நிலைப் பயன்பாட்டுக்காகத் தரையிறங்குதல் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வானூர்தித் தொழிற்படுத்துநரிடமிருந்தும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான கட்டணமொன்றை அறவிடலாம்.

22. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, அணுமுறை மேற்பரப்பின் 3000 மீற்றருக்குள் ஏதேனும் முன்மொழியப்பட்ட நிர்மாணம் தொடர்பில் தொழிற்படுத்துநருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்தகைய விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி, நீர் வானூர்தி நிலையங்களுக்கான தடைக்கட்டுப்பாட்டைச் செயற்படுத்தாதிருக்கலாம் என்பதுடன், அமைச்சரினால் வேறு வகையாகத் தீர்மானிக்கப்பட்டாலொழிய, நீர் வானூர்தி நிலையத் தொழிற்பாடுகளைவிட நிர்மாணச் செயற்பாடு முன்னுரிமை பெறுதலும் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) இன்கீழான அறிவித்தலொன்றைப் பெற்றதன்மேல், வானூர்தி நிலையத் தொழிற்படுத்துநர் -

(அ) எதிர்வரவுள்ள இடையூறுகளினால் அணுமுறை மேற்பரப்பு ஊடுருவப்படுவதாக இருப்பின், எவையேனும் மாற்றுத் தொழிற்பாட்டு முறைகள் பற்றி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து ஆறு மாதங்களைக்கொண்ட காலப்பகுதியொன்றினுள் புதிய நீர் வானூர்தி நிலையத்தைத் தாபிப்பதற்கான மாற்று அமைவிடமொன்றைக் கண்டறிதல் வேண்டும்.

(3) தொழிற்படுத்துநர் நீர் வானூர்தி நிலையமொன்றை வேறோர் அமைவிடத்தில் தாபிக்க விரும்புகின்றவிடத்து, அவர் 3ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வானூர்திநிலைய உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உரிமத்தின் வழங்குகைக்காகவும் அது தொடர்பிலும் 4ஆம் மற்றும் 5ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

23. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"சட்டம்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டம் என்று பொருளாகும்;

"அணுமுறை மேற்பரப்பு" என்பது, தொடக்க நிலைப்படிக்கு முன்னருள்ள சாய்தளம் என்று பொருளாகும்; அதன் எல்லைகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:

(அ) ஓடுபாதையின் நீண்ட மத்திய கோட்டுக்குக் கிடையாகவும் செங்குத்தாகவும் உள்ளதும், தொடக்கநிலைப்படிக்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட ஒரு தூரத்தில் அமைக்கப்பட்டதும், குறித்துரைக்கப்பட்ட நீளத்திலானதுமான உள்விளிம்பொன்று;

(ஆ) ஓடுபாதையின் நீண்ட மத்திய கோட்டிலிருந்து குறித்துரைக்கப்பட்டவோர் அளவில் ஒருசீராக விரிவடைகின்றவையும், உள்விளிம்பின் முனைகளில் தொடங்குகின்றவையுமான இரு பக்கங்கள்;

(இ) உள்விளிம்புக்கு சமாந்தரமாகவுள்ள வெளிவிளிம்பொன்று; அத்துடன்

(ஈ) பக்கவாட்டு உட்சாய்வில், உட்சாய்வு அல்லது வளைந்த அணுமுறைகள் பயன்படுத்தப்படும் போது உள்விளிம்பின் முனைகளில் தொடங்குகின்றவையும் பக்கவாட்டு உட்சாய்வின், உட்சாய்வின் அல்லது வளைந்த நிலத் தடவழியின் நீண்ட மத்திய கோட்டிலிருந்து குறித்துரைக்கப்பட்ட ஓர் அளவில் ஒரு சீராக விரிவடைகின்றவையுமான இரு பக்கங்கள்

"அதிகாரசபை" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தில் அச்சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தில் அச்சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மிதவை விமானம்" என்பது, நீரின் மேற்பரப்புக்கு மேலாக வானூர்தியின் உடற்பகுதிக்கு ஆதாரமளிப்பதற்குத் தனிவேறான மிதவைகள் பொருத்தப்பட்ட கடல் விமானம் என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் குடியியல் வான்செலவு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும் என்பதுடன், அமைச்சு என்னும் பதம் அதற்கிணங்கவும் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

"வானூர்தி நிலையத் தொழிற்படுத்துநர்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தில் அச்சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"காப்பு முகாமைத்துவ முறைமை" என்பது, தொழிற்படுத்துநரொருவரினால் வானூர்தி நிலையக் காப்புக் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலுக்கான ஒழுங்கமைப்புசார் கட்டமைப்பு, வகைகூறல்கள் அல்லது பொறுப்புக்கள், நடவடிக்கைமுறைகள், செயல்முறைகள் மற்றும் ஏற்பாடுகள் ஆகியன உள்ளடங்கலாக, வானூர்தி நிலையமொன்றில் காப்பு முகாமைத்துவத்துக்காகவுள்ள முறைமையொன்று என்று பொருளாகும்; அது, வானூர்தி நிலையமொன்றினதும் அதன் பாதுகாப்பான பயன்பாட்டினதும் காப்பைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றது;

"நீர் வானூர்தி நிலையம்" என்பது, ஏதேனும் கட்டிட நிறுவுகை மற்றும் நிலத்தின் அல்லது நீரின் மேலுள்ள சாதனம் என்பன உட்பட, வானூர்தியொன்றின் வந்தடைதலுக்காகவும், புறப்படுகைக்காகவும் மற்றும் நகர்த்தலுக்காகவும் ஒன்றில் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்படும் ஏதேனும் வரையறுக்கப்பட்ட நீர்நிலை இடப்பரப்பொன்று எனப் பொருளாகும்;

"நீர்நிலை" என்பது, குறிப்பிடத்தக்களவில் முழுமையான நீர்நிலை என்று பொருளாகும்; அது, முழுமொத்த ஆறு, கால்வாய், ஏரி, நீர்த்தேக்கம், கடல், வாவி, குடா அல்லது துறைமுகத்தை உள்ளடக்கலாம்.

[ஒழுங்குவிதி 3]

**அட்டவணை I**
**படிவம் அ**

**நீர் வானூர்தி நிலைய உரிமத்திற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரர் பற்றிய விபரங்கள்

முழுப்பெயர் ..........................................................................................................................................
முகவரி ..................................................................................................................................................
..............................................................................................................................................................
..............................................................................................................................................................

பதவிநிலை ...........................................................................................................................................

2. வானூர்தி நிலையத் தளம் பற்றிய விபரங்கள்
(*வானூர்தி நிலைய குறிப்பீட்டுப் புள்ளியின் ஜீபீஎஸ் ஆயத்தொலைவுகள் கொடுக்கப்படுதல் வேண்டும்)

வானூர்தி நிலையத்தின் பெயர் ...................................................................................................

வானூர்தி நிலையத்தின் புவியியல் ஆயத்தொலைவுகள்* .........................................................................

3. விண்ணப்பதாரர் வானூர்தி நிலையத் தளத்தின் சொந்தக்காரரா?

ஆம் ☐ இல்லை ☐

இல்லை எனின்,
a) தளம் தொடர்பாக வைத்திருக்கப்படும் உரிமைகள் பற்றிய விபரங்கள்; அத்துடன்
b) தளத்தினது சொந்தக்காரரின் பெயரும் முகவரியும் அத்துடன் தளமானது விண்ணப்பதாரரினால் வானூர்தி நிலையமொன்றாகப் பயன்படுத்தப்படுவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளமையைக் காண்பிப்பதற்கான எழுத்திலான சான்று.

4. வானூர்தி நிலையத்தில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வானூர்தியின் மிகப்பெரிய

குறியீடு* ..............................................................................................................................................

வகையினைச் சுட்டிக்காட்டுக.
* ஐசிஏஓ (ICAO) வானூர்தி குறிப்பீட்டுக் குறியீடு

5. வானூர்தி நிலையத்தின் வகுப்பாக்கம்

| A | | | | B | | C | | D | | E | | | | F | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A1 | A2 | A3 | A4 | B1 | B2 | C1 | C2 | D1 | D2 | E1 | E2 | E3 | E4 | F1 | F2 | F3 |
| | | | | | | | | | | | | | | | | |

6. வானூர்தி நிலையத்தின் வகைசொல்லும் முகாமையாளரின் பெயர், பதவித் தலைப்பு மற்றும் தொடர்புகொள்ளும் விபரங்கள்;

| |
|---|
| பெயர்: ................................................................................................................................................................ |
| பதவித் தலைப்பு: ................................................................................................................................................... |
| தொடர்புகொள்ளும் விபரங்கள்: ................................................................................................................................ |
| ................................................................................................................................................................................ |

7. வானூர்தி நிலைய உரிமத்தின்மீது காண்பிக்கப்படவுள்ள விபரங்கள்

| |
|---|
| வானூர்தி நிலையப் பெயர் ............................................................................................................................... |

| |
|---|
| நான் வானூர்தி நிலையத்தை தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்றுக்காக இத்தால் விண்ணப்பிக்கின்றேன். |
| கையொப்பம் ....................................... |
| திகதி ................................................... |

தகவல்

1. வானூர்தி நிலையத் தொழிற்பாடுகள் பற்றிய கையேட்டின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
2. விண்ணப்பத்திலுள்ள எல்லாக் கருமங்களையும் ஆதாரப்படுத்தும் ஆவணச்சான்று கோரப்படலாம்.

[ஒழுங்குவிதி 5]

**படிவம் ஆ**

*வானூர்தி நிலைய உரிம இல. (உரிம இலக்கம்)* *குறிப்பீடு :(கோப்பு குறியீட்டு இல.)*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**

*இலங்கை குடியியல் வான்செலவு அதிகாரசபை*

***வானூர்தி நிலைய உரிமம்***

*(நீர் வானூர்தி நிலையத்தின் பெயர்)*

*2022 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை நீர் வானூர்தி நிலையங்கள் ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியைப் பின்பற்றி, குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமையதிபதி, இதற்கான இணைப்பில் தரப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க, (நீர் வானூர்தி நிலையத்தின் பெயர்) என்னும் நீர் வானூர்தி நிலையத்தை தாபிப்பதற்கு, தொழிற்படுத்துவதற்கு மற்றும் பேணுவதற்காக வானூர்தி நிலைய உரிமத்தை (வானூர்தி நிலைய தொழிற்படுத்துநரின் பெயர்) என்னும் பெயருடைய வானூர்தி நிலைய தொழிற்படுத்துநருக்கு வழங்கியுள்ளாரென இத்தால் சான்றுப்படுத்தப்படுகின்றது.*

*இந்த உரிமமானது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் இடைநிறுத்தப்பட்டால் அல்லது இல்லாதொழிக்கப்பட்டால் ஒழிய, அல்லது அதுவரையில், செல்லுபடியாதல் வேண்டும்.*

*குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமையதிபதி*

*இல. 152/1, மினுவாங்கொட வீதி,*
*கட்டுநாயக்க.*
*திகதி:*

[ஒழுங்குவிதி 5 மற்றும் 13]

## அட்டவணை II

*நீர் வானூர்தி நிலைய உரிமத்துக்கான நிபந்தனைகள்*

1. இந்த உரிமம் கைமாற்றப்படத்தக்கதாக இருத்தலாகாது.

2. உரிமத்தை வைத்திருப்பவர், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 120 ஆம் பிரிவுக்கமைய குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஏற்புடையனவான நடைமுறைப்படுத்தல் நியமங்களின் தேவைப்பாடுகளுக்கும் அவரினால் காலத்துக்குக்காலம் தெரிவிக்கப்படும் ஏதேனும் தேவைப்பாட்டுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

3. உரிமத்தை வைத்திருப்பவர், அங்கீகரிக்கப்பட்ட வானூர்தி நிலையத் தொழிற்பாட்டுக் கைநூலில் தரப்பட்ட நடவடிக்கைமுறை களுக்கிணங்க வானூர்தி நிலையத்தைத் தொழிற்படுத்தலும் பேணுதலும் வேண்டும்.

4. உரிமத்தை வைத்திருப்பவர், முழுமையான, செம்மையான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட வானூர்தி நிலையத் தொழிற்பாட்டுக் கைநூலொன்றைப் பேணுதல் வேண்டும்.

5. வானூர்தியின், தொழிற்படுத்தும் இயக்குதொகுதியினரின், பயணிகளின் அல்லது ஆதனத்தின் காப்பு அல்லது பாதுகாப்பு விட்டுக்கொடுக்கப்படுகின்ற அல்லது விட்டுக்கொடுக்கப்படுவதற்கு சாத்தியமுள்ளதான அவசரகால நிலையொன்றின் விடயத்தில் ஒழிய, நீர் வானூர்தி நிலையத்தின் உரிமத்தை வைத்திருப்பவரும் அதன் ஊழியர்களும், குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்தான முன்னங்கீகாரமின்றி வானூர்தி நிலைய தொழிற்பாட்டுக் கைநூலில் குறித்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து விலகிச்செல்லுதலாகாது. மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக, அங்கீகரிக்கப்பட்ட அளவுக் குறிப்பீடுகளிலிருந்தான ஏதேனும் விலகிச்செல்லுகையானது, அதற்கான காரணங்களுடன் சேர்த்து உடனடியாக குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

6. நீர் வானூர்தி நிலையத்தின் உரிமத்தை வைத்திருப்பவர் -

   அ. வானூர்தி தொழிற்பாடுகளின் காப்பை உறுதிப்படுத்துவதற்கு, விடயத்துக்கேற்ப, நீர்நிலையின் அல்லது நீர் வானூர்தி நிலையத்தின் சொந்தக்காரருடனான ஒருங்கிணைப்பில் சுற்றுப்புறங்களைப் பேணுதல் வேண்டும்;

   ஆ. நீர் வானூர்தி நிலையத்தின் நகரும் இடப்பரப்பை பேரிடர்கள் இல்லாததாகவும் மற்றும் தடைகளற்றதாகவும் பேணுதல் வேண்டும்.

7. நீர் வானூர்தி நிலையத்தின் உரிமத்தை வைத்திருப்பவர் -

   அ. வானூர்தி நிலையத்தினூடாகத் தொழிற்படுத்தப்படுகின்ற எல்லா வானூர்திகளும் வானோடல் ஒழுங்குவிதி 108 இன்கீழான இரைச்சல் மற்றும் அதிர்வுகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் அவற்றோடிணைந்த நடைமுறைப்படுத்தல் நியமங்களுக்கும் இசைந்தொழுகுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்;

   ஆ. கட்புலக்குறிப்பு வான்பயண விதிகளின் நிபந்தனைகளுக்கமைய சூரியோதயம் முதல் சூரியஅஸ்தமனம் வரை வானூர்தி நகர்வுகள் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

   இ. சர்வதேச ரீதியிலான தொழிற்பாடுகள் குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்துமூலம் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால் ஒழிய, அத்தகைய சர்வதேச ரீதியிலான தொழிற்பாட்டுக்காக வானூர்தி யெதுவும் வானூர்தி நிலையத்தைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

   ஈ. ஏற்புடையனவான ஒழுங்குவிதிகள், நடைமுறைப்படுத்தற் தராதரங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளின் மீறுகையாக வானூர்தியொன்றினால் வானூர்தி நிலையம் பயன்படுத்தப்படுவதை அனுமதித்தலாகாது;

   உ. அங்கீகரிக்கப்பட்ட வானூர்தி நிலையத் தொழிற்பாட்டுக் கைநூலின் தேவைப்பாடுகளுக்கும் நடைமுறைப்படுத்தற் தராதரங்களுக்கும் இசைந்தொழுகி நியமப்படுத்தப்பட்ட சின்னங்கள் மற்றும் தகவல் விளம்பரப்பலகைகளை உபயோகித்து எல்லா சமிக்ஞைகளையும் பெயர்ப்பலகைகளையும் பேணுதல் வேண்டும்;

   ஊ. இணங்கியொழுகப்பட்ட தேசிய குடியியல் வான்செலவு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்தி வினைத்திறனான விமான நிலைய பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தைத் தாபித்துப் பேணுதல் வேண்டும்;

எ. நீர் வானூர்தி நிலையத்தின் முழுத் தொழிற்பாடு தொடர்பிலும் காப்பு முகாமைத்துவ முறைமையொன்றைப் பேணுதல் வேண்டும்;

ஏ. பின்வரும் நிலைமைகளுள் ஏதேனும் நிலைமை பற்றி குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் -

i. வானூர்தி நிலையத்தில் அல்லது அதன் சுற்றுப்புறத்திலான வானூர்தி விபத்து அல்லது அசம்பாவிதம்;

ii. பயணிகளின் காப்பை அல்லது பாதுகாப்பை பாதிக்கின்ற வானூர்தியினுள்ளான ஏதேனும் அசம்பாவிதம்;

iii. ஏதேனும் காப்பு அல்லது பாதுகாப்புத் தேவைப்பாடுகளின் மீறுகை;

iv. விமான நிலையத்திலுள்ள ஆட்களின் வானூர்தித் தொழிற்பாடுகளின் காப்பை அல்லது பாதுகாப்பை மோசமாகப் பாதிக்கின்ற குறை, குறைபாடு அல்லது பற்றாக்குறை;

v. ஒன்றில் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வானூர்தி நிலையம் மூடப்படுதல்;

vi. ஏதேனும் காரணத்துக்காக வானூர்தி நிலையத் தொழிற்பாடுகளுக்கான தட ங்கல்.

ஐ. விதித்துரைக்கப்படக்கூடியவாறான வருடாந்த உரிமக் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

EOG *08 - 0078*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.